**தலைப்பு 154 – கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 154 – கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 திசெம்பர் 23 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 18,364.17 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அவற்றுள் ரூபா 11,931.51 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 6,432.66 மில்லியன் அதாவது 35.03 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 7,788.42 | 7,696.15 | 92.27 | 1.18 |
| மூலதனம் | 10,575.75 | 4,235.36 | 6,340.39 | 59.95 |
| மொத்தம் | 18,364.17 | 11,931.51 | 6,432.66 | 35.03 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் பயன்பாடு**

பல்வேறு பணிகளுக்காக அமைச்சிற்கு ஏனைய இரண்டு அமைச்சுக்களினால் கூட்டுமொத்தமாக ரூபா 112.5 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 111.6 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் ரூபா 0.9 மில்லியன் அதாவது 0.8 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 15401 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 18.00 | 19.48 | 5.00 | 3.72 | 80.00 | 29.49 |

## 2.3 கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சின் கீழுள்ள நான்கு கட்டுநிதிக் கணக்குகளின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 18.64 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கட்டுநிதிக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
| --- | --- |
| | ரூபா மில்லியன் |
| 7002/0000/00/0046/0015/000 | 40.46 (வரவு) |
| 7002/0000/00/0339/0014/000 | 0.81 (வரவு) |
| 7002/0000/00/0339/0015/000 | 0.03 (செலவு) |
| 7002/0000/00/0445/0015/000 | 22.60 (செலவு) |
| மொத்தம் | 18.64 (வரவு) |

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சின் கீழுள்ள மூன்று வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுமொத்தமான மீதி ரூபா 16.00 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **வைப்புக் கணக்கு இலக்கம்** | **2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
| --- | --- |
| | **ரூபா மில்லியன்** |
| 6000/0000/00/0012/0077/000 | 5.00 |
| 6000/0000/00/0015/0029/000 | 8.36 |
| 6000/0000/00/0015/0041/000 | 2.64 |
| **மொத்தம்** | **16.00** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 3. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

அமைச்சினால் 2016 மார்ச் 31 ஆந் திகதியளவில் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது. ஒதுக்கீட்டுக் கணக்கு 2016 மார்ச் 31 ஆந் திகதி குறைபாடுகளுடன் சமர்ப்பிக்கப்பட்டு மீளத்திருத்தி 2016 யூலை 11 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு 2016 செப்தெம்பர் 08 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 3.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே குறிப்பிடப்படுகின்ற நிலையான சொத்துப் பதிவேடு நாளது வரையாக்கப்படாதிருந்ததுடன் ஏனைய பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ii) | இழப்பு, நட்டப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| (iii) | பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| (iv) | மின் உபகரணப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |
| (v) | பொருட் பதிவேடு | நிதிப்பிரமாணம் 754 |
| (vi) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |
| (vii) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

### 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.3.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 15 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 3,875.58 மில்லியன் மொத்தத் தேறிய நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 03 செலவின விடயங்களுக்காக நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து ஏனைய செலவின விடயங்களிலிருந்து கூட்டுமொத்தமாக ரூபா 75,436,599 தொகையான நிதி ஏற்பாடு மாற்றப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையில் அவ்வாறு மாற்றப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 69,203,395 தொகை அதாவது மாற்றப்பட்ட நிதி ஏற்பாட்டில் 92 சதவீத நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தன.

#### 3.3.2 எதிர்பாராத சந்தர்ப்ப நிதியத்திலிருந்து பெறப்பட்ட நிதி ஏற்பாடு

அமைச்சிற்கு எதிர்பாராத சந்தர்ப்ப நிதியத்திலிருந்து ரூபா 5,000,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு பெறப்பட்ட நிதிஏற்பாடு பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அமைச்சின் ஏடுகளின் பிரகாரம் அந்த வைப்புக் கணக்கில் செலுத்தப்பட்டு ஆண்டின் இறுதியளவில் ரூபா 931,620 மீதியொன்று காணப்பட்டிருந்தும் திறைசேரி ஏடுகளின் பிரகாரம் அந்த மீதி ரூபா 5.00 மில்லியனாக இருந்தது. நிச்சயமற்ற சந்தர்ப்ப நிதியத்திலிருந்து

பெறப்பட்ட முற்பணத்தைத் தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போது குறைநிரப்பு மதிப்பீடொன்று அல்லது குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கத்தின் ஊடாகவோ நிதிஏற்பாடு பெறப்பட்டமைக்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 கட்டுநிதிக் கணக்குகள்

திறைசேரி கணனி அச்சிடல் குறிப்புக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக அமைச்சின் கீழ் 04 கட்டுநிதிக் கணக்கு இலக்கங்கள் பேணப்பட்டிருந்தன. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 18,637,118 தொகையான வரவு மீதி காணப்பட்டது. ஒதுக்கீட்டுக் கணக்கில் கட்டுநிதிக் கணக்குகள் தொடர்பான பொழிப்பு அறிக்கையின் இலக்கம் 7002/0000/00/0445/0015/000 இன் கீழ் ரூபா 22,601,033 செலவு மீதியொன்று குறிப்பிடப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 10 ஆந் திகதிய 245/2015 ஆம் இலக்கம் அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வேறுபாட்டிற்கான காரணம் மற்றும் கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ள புத்தகங்களின் பிரகாரம் மீதிகளின் உள்ளடக்கம் விளக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 பொது வைப்புக் கணக்கு

02 வருடங்களை விஞ்சிய ரூபா 9,193,295 கூட்டுத்தொகையான 05 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 15401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இணக்கக் கூற்றின் பிரகாரம் ஆண்டிற்கான மொத்த வரவு வைத்தல் மற்றும் செலவு வைத்தல்களுக்குரிய மீதிகள் அமைச்சின் ஏடுகளின் பிரகாரமான வரவு வைத்தல்களுக்கும் செலவு வைத்தல்களுக்கும் மற்றும் திறைசேரி புத்தகங்களின் பிரகாரமான வரவு வைத்தல் மற்றும் செலவு வைத்தல் பெறுமதிகள் ஒன்றுக்கொன்று வேறுபாடாக இருந்தது. இதன் காரணமாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் எல்லையை விஞ்சியவை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அமைச்சின் புத்தகங்களும் திறைசேரி புத்தகங்களும், இணக்கஞ் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து ஓய்வுபெற்றுச் சென்ற மற்றும் சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை முறையே ரூபா 4,261 மற்றும் ரூபா 62,776 ஆக இருந்தது. அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

### 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

அமைச்சில் விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்ட வாகனங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அகற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்ட 18 வாகனங்கள் மற்றும் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட 26 வாாகனங்கள் என 44 வாகனங்களும், 7 மாதம் முதல் 68 மாதங்கள் வரையான காலவீச்சிலிருந்து 16 வாகனங்களும் விளைவற்றுக் காணப்பட்டன. ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட 26 வாகனங்களில், 10 வருடங்களுக்கு குறைந்த காலம் மாத்திரம் பயன்படுத்தப்பட்ட 11 வாகனங்களும் காணப்பட்டன. அந்த வாகனங்களை ஓட்டத்திலிருந்து அகற்றுவதற்கான மதிப்பீடு தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரையும் உள்ளடக்கிய மெய்மையாய்வுச் சபையினால் மேற்கொள்ளவேண்டியிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்கூறப்பட்ட ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட 26 வாகனங்களில் ரூபா 18,000,000 பெறுமதியான லேன்ரோவர், டிபெண்டர் வகையின் டபள்கெப் வண்டியொன்று காணப்பட்டது. அந்த வாகனம் நிதி அமைச்சின் மூலம் குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டு கால்நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சின் கீழ் முதல் தடவையாக பதிவு செய்யப்பட்டதன் பின்னர் இந்த அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த வாகனம் 2015 ஒக்தோபர் மாதம் முதல் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் முன்னைய அமைச்சினால் உள்நாட்டு பிரதிநிதித்துவக் கட்டணம் செலுத்தாமையின் காரணமாக வாகனம் சேவை நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது, அந்த நிறுவனத்தினால் வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை கோவையைப் பரீட்சித்த போது அவதானிக்கப்பட்டது. முன்னைய அமைச்சிற்கு சரியான அதிகாரத்தின் கீழ் வாகனத்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காது வாகனம் எடுத்துச் செல்லப்பட்டமையினாலும், நிறுவனத்தினால் அரசாங்கத்தின் வாகனமொன்று நிறுத்தி வைக்கப்பட்டமை தொடர்பாகவும் தேவையான நடவடிக்கைகள் அமைச்சினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அமைச்சிற்காக 30 சாரதிகளின் எண்ணிக்கை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் கீழ் நியமிக்கப்பட்ட சாரதிகளின் எண்ணிக்கை 37 ஆக இருந்தன. எவ்வாறாயினும், அமைச்சிற்கு 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 137 ஆக இருந்தன. அதன் பிரகாரம் 100 வாகனங்களை ஓட்டுவதற்குத் தேவையான சாரதிகள் பற்றாக்குறையினால் அந்த வாகனங்கள் விளைவற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

---

நிதிப் பிரமாணம் 756, 757 மற்றும் 1647 இன் பிரகாரம் வாகனங்கள் தொடர்பான வருடாந்த மெய்மையாய்வு மேற்கொண்டு அது தொடர்பான அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

---

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்த அமைச்சிற்குக் கையளிக்கப்பட்ட பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சிற்கும் கூட்டுறவு, உள்நாட்டு வணிக அமைச்சிற்கும் கீழுள்ள சொத்துக்களில் ரூபா 247,880,093 தொகையான சொத்துக்கள் அமைச்சின் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. எனினும், அந்த சொத்துக்கள் முறையாகக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அவை புதிய அமைச்சிற்கு கையளிக்கப்பட்ட செயற்திட்டங்களுக்குரியதா எனவும் பௌதீக ரீதியில் பொறுப்பில் காணப்படுகின்ற சொத்துக்களா எனவும் கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக் கொள்ளமுடியாதிருந்தது.

(ii) 2015 செப்தெம்பர் 21 ஆந் திகதி முதல் அமைச்சிற்கு கையளிக்கப்பட்ட சமூக சேவை நலன்புரி மற்றும் கால்நடைவள அபிவிருத்தி அமைச்சிலிருந்து கிடைத்த ரூபா 317,629,620 பெறுமதியான 35 வாகனங்கள் மற்றும் ஏனைய 1164 பொருட்பதிவேட்டு விடயங்கள், 2015 பெப்ரவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,532,507 பெறுமதியான 135 நிலையான சொத்து விடயங்களும் 2016 பெப்ரவரி 09 ஆந் திகதி வரையிலும் நிலையான சொத்துப் பதிவேட்டிலோ அல்லது பொருட் பதிவேட்டிலோ உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 03 அமைச்சுக்களிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட 147 வாகனங்களில் 2016 யூன் 30 ஆந் திகதி வரையில் 48 வாகனங்கள் வெளி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. 2015 செப்தெம்பர் 21 ஆந் திகதி முதல் 2016 யூன் 30 ஆந் திகதி வரை வெளி நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட 08 வாகனங்களையும் உள்ளடக்கி அத்திகதியில் உள்ளவாறு அமைச்சிற்குக் சொந்தமான வாகனங்களின் எண்ணிக்கை 107 ஆக இருக்க வேண்டியிருந்த போதிலும், அத்திகதியில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 103 வாகனங்கள் காணப்பட்டன. அந்த 103 வாகனங்களில் மேற்கூறப்பட்ட வாகனங்களுக்கு மேலதிகமாக வேறு இரண்டு வெளி நிறுவனங்களுக்குச் சொந்தமாகக் காணப்பட்ட 03 வாகனங்களும் இருந்தன. அதன் பிரகாரம் 2016 யூன் 30 இல் உள்ளவாறு அமைச்சிற்குச் சொந்தமாகக் காணப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 100 ஆக இருந்தது.

**(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சினால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்க்கப்படாத 01 வருடத்திற்குக் குறைந்த பொறுப்புக்கள் ரூபா 12,970,958 ஆக இருந்தது.

(ii) 07 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பை விஞ்சி கூட்டுமொத்தமாக ரூபா 945,819 பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

(iii) தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அமைச்சு ரூபா 8.73 மில்லியன் தொகை கடன்பட்டோராகக் காண்பித்த போதிலும், 2014 இன் ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் கால்நடைவள மற்றும் கிராமிய சமூக அமைச்சின் கால்நடைப் பிரிவின் கீழ் அல்லது 2015 இன் ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் கீழ் அல்லது தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையின் பெயரில் பொறுப்பொன்றாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 755(1)(2) | சேவை நிலைய மாற்றம் போன்ற சந்தர்ப்பங்களில் பொருட்களைக் கையளிக்கும் போதும் பொருட்களைக் கையேற்கும் போதும் சகல அரசாங்க பொருட்களும் ஏனைய சொத்துக்களும் கையளிக்கப்பட்டு கையளிக்கப்படும் உத்தியோகத்தரிடமிருந்து அவை பெறப்பட்டமைக்கான பற்றுச்சீட்டொன்று பெறப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 1646 | அமைச்சின் 100 குழாம் வாகனங்களினதும் நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கை என்பன அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 1647(ஆ) | வாகனங்களின் பொறுப்பளிப்புத் தன்மை மாறுபடுகின்ற சந்தர்ப்பங்களில் வாகனங்கள் மற்றும் அவற்றின் உபகரணங்கள் தொடர்பாக முழுமையான மெய்மையாய்வு நடாத்தப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கை | |
| 2010 மே 14 ஆந் திகதிய CA/1/17/1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3 ஆவது பந்தி | அமைச்சரினதும் பிரதி அமைச்சரினதும் பாவனைக்காகவும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவும் ஒதுக்கப்படக்கூடிய ஆகக் கூடிய உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை 03 ஆக இருக்க வேண்டிய போதிலும், அந்த எல்லையினை விஞ்சி கௌரவ அமைச்சருக்கு 6 வாகனங்களும், கௌரவ பிரதி அமைச்சருக்கு 5 வாகனங்களும் ஒதுக்கப்பட்டிருந்தன. |

## 3.9 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

### செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடல்

அமைச்சினால் 2015 செப்தெம்பர் 21 ஆந் திகதி ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 4,912.82 மில்லியன் கூட்டுத்தொகையான எட்டு செயற்திட்டத்திங்கள் 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.10 செயலாற்றல்

### 3.10.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயல் முன்னேற்றம்

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினதும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினதும் பிரகாரம் அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அமைச்சின் கால்நடைவள பிரிவினால் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை 06 வருட காலப்பகுதியின் போது ரூபா 5,213.4 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. (கால்நடை உற்பத்தி திணைக்களத்தின் செலவினம் தவிர) 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டின் பால் உற்பத்தி 126.89 மில்லியன் லீற்றரினால் அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் லீற்றர் ஒன்றின் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு ரூபா 41.00 செலவிடப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கி அறிக்கையில் குறிப்பிட்டதன்படி பால் உற்பத்தியின் லீற்றறொன்றின் சராசரி கிரயம் ரூபா 32.42 ஆக இருந்தது. அதன் பிரகாரம் பால் லீற்றர் ஒள்றின் உற்பத்திக்கு செலவாகின்ற கிரயத்தைவிட அதிக கிரயமொன்றை ஒரு லீற்றரால் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு அரசாங்கம் செலவிட்டிருந்தது.

(ஆ) 2004 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்டிருந்த பால் உற்பத்தி மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் 1,250 விற்பனைக் கடைகளை தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 685 விற்பனை கடைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அதில் 283 விற்பனைக் கடைகள் கால்நடைவள அபிவிருத்திச் சபையினால் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2015 ஆம் ஆண்டு வரையிலும் அதில் 43 விற்பனைக் கடைகள் அதாவது 15 சதவீதம் அளவில் செயற்படு நிலையில் காணப்பட்டது. மாகாண மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த மிகுதி 402 விற்பனைக் கடைகளில் தற்போது 112 விற்பனைக் கடைகள் அதாவது 28 சதவீதம் மாத்திரம் செயற்படு நிலையில் காணப்பட்டது. விற்பனைக் கடைகள் மூடப்படுகின்றமை தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமையை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2014 ஆம் ஆண்டு மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 73.10 மில்லியன் மற்றும் ரூபா 46.37 மில்லியன் என செலவிடப்பட்டிருந்த போதிலும் அப்பணம் பயன்படுத்தப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட விற்பனை கடைகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை அமைச்சினால் ரூபா 51.00 மில்லியன் செலவில் 9,358 நடுத்தர அளவிலான கோழிப் பண்ணைகளும், 105 இறைச்சி தயாரிக்கும் நிலையங்களும் ஸ்தாபிக்ககப்பட்டிருந்தன. அவைகளின் தற்போதைய நிலைமை தொடர்பாக அமைச்சு பின்தொடர் நடவடிக்கைகளைச் செய்தமையை உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.10.2 போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

அமைச்சின் கீழ் அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட நிறுவனத் தொகுதிகளுக்கிடையே கிராமிய புனர்வாழ்வு நிதியம், கிராமிய பொருளாதார புனர்வாழ்வு நிதியம் (நிதி), ஜனதிரிய நிதியம் (கிராமோதய சபை நிதியம்) என்ற நிறுவனங்கள் 2016 யூலை 12 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.11 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பமொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

அமைச்சின் கொள்வனவு செய்யும் பிரிவினால் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 336,310 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் நேரடியாகப் பெறப்பட்டதன் பின்னர் அந்த பட்டியல் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

### 3.12 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சு நடாத்திச் செல்லப்படுகின்ற கட்டிடத்தின் 5 ஆம் மாடியில் 1,386 சதுர அடியான இடமொன்று 2015 செப்தெம்பர் மாதம் முதல் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு பயன்படுத்தியிருந்த போதிலும், முழுமையான 5 ஆவது மாடிக்கும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் வாடகை செலுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2015 ஒக்தோபர் மாதம் முதல் 2016 மே மாதம் வரை 08 மாத காலத்திற்காக வேறொரு நிறுவனத்தால் பயன்படுத்தப்பட்ட இடப்பகுதிக்காக அமைச்சினால் ரூபா 878,768 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 3.13 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வாகனத்தை பழுதுபார்க்கும் போது அல்லது உதிரிப்பாகங்களைப் பொருத்தும் போது அகற்றப்பட்ட உதிரிப்பாக உபகரணங்கள், கருவிகள் தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய பதிவேடொன்றைப் பேணிச் செல்லல் மற்றும் அவ்வாறு அகற்றப்பட்ட பாகங்களை பாதுகாப்பாக வைத்து முறையான பிரகாரம் கையளித்தல் என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்துக்களுக்குரிய அகற்றும் நடவடிக்கைகள் 03 மாதங்களுக்குள் பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்தது. 2016 சனவரி 26 ஆந் திகதி மெய்மையாய்வுச் சபையினால் சிபாரிசு செய்யப்பட்டிருந்த அகற்றுதல் மற்றும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளவேண்டிய 30 வாகனங்கள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் 2016 யூலை 10 ஆந் திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. பொருள் மெய்மையாய்வுச் சபையினால் மெய்மையாய்வு செய்யப்பட்ட திகதி முதல் 05 மாதங்கள் ஆன குறுகிய காலத்திற்குள் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளரினால் மீண்டும் பிரச்சினைகளுடன் கூடியதாக மேலதிகமாக 15 வாகனங்கள் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட வேண்டியதென சிபாரிசு செய்யப்பட்டிருந்தது.

(இ) அகற்றுவதற்காக சிபாரிசு செய்யப்பட்ட 02 வாகனங்களுக்குரிய பதிவுச் சான்றிதழ் காணப்படாதிருந்ததுடன் முன்னாள் அமைச்சிடமிருந்து கையேற்கப்பட்ட வாகனமொன்றிற்காக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் உரித்து

சான்றிதழின் பிரதியில் உரித்து வெளிநபரொருவருக்கு உரித்தாகின்றமை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

(ஈ) அமைச்சின் விடயப்பரப்பிற்குரிய பொருளாதார நிலையங்களை தாபித்தல் மற்றும் மேற்பார்வை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) விவசாயிகளின் விவசாய உற்பத்திகளை நேரடியாக விற்பனை செய்வதற்காகவும், உற்பத்தியாளர்களையும் மொத்த வியாபாரிகளையும் மற்றும் நுகர்வோர்களையும் நேரடியாக தொடர்புபடுத்தும் வகையில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலம் வினைத்திறனான விலைப் பொறிமுறையொன்றை அமுல்படுத்தும் நோக்கில் விஷேட பொருளாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அதில் எதிர்பார்க்கப்படுகின்ற போட்டியாளர் விலையினை உற்பத்தியாளர்களுக்காக வழங்குவதற்கும் நுகர்வோர்களுக்காக வினைத்திறனான நியாயமான விலைப் பொறிமுறையை அமுல்படுத்தியதை உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும் குருந்துவத்த மற்றும் நாரஹேன்பிட்ட போன்ற பொருளாதார நிலையங்களில் விவசாய உற்பத்திகளை நேரடியாக விற்பனை செய்வதற்குப் பதிலாக ஏனைய வியாபார நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது.

(ii) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் நிதியத்திற்கான நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் அரச நிதித் திணைக்களத்திற்கு பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது. எனினும், நிலையங்களின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களிலும் பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

- ❖ மேல் மாகாணத்தில் அமைந்துள்ள 6 பொருளாதார நிலையங்கள் 2008 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை 26 நிதிக்கூற்றுக்களும், தமுத்தேகம நிலையத்திற்காக 2005 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையும் மற்றும் எம்பிலிபிட்டி, கெப்பெட்டிபொல மற்றும் வீரவில என்பவற்றில் அமைந்துள்ள மூன்று பொருளாதார நிலையங்களுக்காக அவை ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலும் நிதிக்கூற்றுக்கள் 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- ❖ மேல்மாகாணத்தில் அமைந்துள்ள நிலையங்களினால் 19 நிதிக்கூற்றுக்கள் 04 மாதங்கள் முதல் 6½ வருடங்கள் வரையான வீச்சிலான கால தாமதத்தின் பின்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

- ❖ ஒரே வகையான மாதிரிப் படிவத்தில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட சில பொருளாதார நிலையங்களின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட கொடுப்பனவு நடவடிக்கைகள், வங்கி

இணக்கக்கூற்று மற்றும் காசேட்டை பேணிச் செல்லல் மற்றும் வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல் போன்ற நடவடிக்கைகளின் போது நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பொருளாதார நிலையங்களில் மேலதிக நிதியை முதலிடுதல் மற்றும் பாதீட்டைத் தயாரித்தல் தொடர்பாக 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2004 யூலை 29 ஆந் திகதிய பீஈடீ 25 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) செயற்படு நிலையில் காணப்படாத பொருளாதார நிலையங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வாரியபொலயில் (ஒதுக்கப் பிரதேசம்) விஷேட பொருளாதார நிலையம் ஸ்தாபிக்கப்பட்டிருந்த பிரதேசம் பொருத்தமற்றது என சாத்திய வள ஆய்வு அறிக்கைகளிலும் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக கவனம் செலுத்தாது 2014 ஏப்ரல் 27 ஆந் திகதி அந்த பொருளாதார நிலையம் நிர்மாணிக்கப்பட்டு ஆரம்பித்து பின்னர் மூடப்பட்டிருந்தது. 2015 மே 31 ஆந் திகதி ரூபா 741,565 தொகை செலவில் திறப்பு விழா நடாத்தப்பட்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் இந்த நிலையம் எவ்வித பயன்படுத்தலுமின்றி மீண்டும் மூடப்பட்டிருந்தமை பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ii) பூஸ்ஸ பொருளாதார நிலையத்திற்காக கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், பொருளாதார நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிலையத்தில் காணப்பட்ட கட்டிடத்துடன் உள்ள நிலம் 2014 மார்ச் 05 ஆந் திகதி முறையாக ஹிக்கடுவ பிரதேச செயலாளருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. பின்னர் பிரதேச செயலாளரினால் அது 2014 யூலை 05 ஆந் திகதி சாகர பல்கலைக்கழகத்திற்கு முறையாகக் கையளிக்கப்பட்டிருந்தது. 2016 யூலை 25 ஆந் திகதி வரையிலும் அது எவ்வித அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படாதிருந்ததாக ஹிக்கடுவ பிரதேச செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(iii) வெலிகம, தெனிபிட்டிய சந்தைக் காணியில் நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட விஷேட பொருளாதார நிலையத்திற்காக 2014 ஆம் ஆண்டில் திறைசேரி நிதிஏற்பாடுகளிலிருந்து ரூபா 6.9 மில்லியன் செலவில் நிர்மாண நடவடிக்கைகள் அரைப்பங்கு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இந்த பொருளாதார நிலையம் தொடர்பான அவதானிப்பு அறிக்கையொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. அக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் இந்த நிலையம் பொருளாதார நிலையமாக அபிவிருத்தி செய்யும் தேவையொன்று காணப்படவில்லையென அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2015 நவம்பர் 18 ஆந் திகதி வரையிலும் இதற்காக செலவிட்ட ரூபா 6.5 மில்லியன் தொகையும் பயனற்றதாக இருந்தது.

(ஊ) மூடப்படாதிருந்த போதும் உரிய பிரகாரம் அமுல்படுத்தப்படாத பொருளாதார நிலையங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்ட கிளிநொச்சி மற்றும் அம்பாறை பொருளாதார நிலையங்களின் நிர்மாண நடவடிக்கைகள் முறையே ரூபா 96.7 மில்லியன் மற்றும் ரூபா 29.2 மில்லியன்

செலவில் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. 2016 ஒக்தோபர் 11 ஆந் திகதி வரையிலும் அந்த கடைகள் வாடகைக்கு வழங்குதல் ஆரம்பிக்கப்படவில்லை.

(ii) 2006 சனவரி 25 ஆந் திகதி ரூபா 21 மில்லியன் செலவில் ஆரம்பிக்கப்பட்டிருந்த கந்தஹந்திய பொருளாதார நிலையத்தில் காணப்பட்ட ஒட்டுமொத்த 25 கடைகளில் 2016 ஆம் ஆண்டு வரையிலும் 03 கடைகள் மாத்திரம் திறக்கப்பட்டிருந்தமை உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) அமைச்சினால் பொருளாதார நிலையங்களின் நிர்வாகத்திற்கான செயல்வழிக் கோவையொன்று 2016 யூன் மாதத்தில் தயாரிக்கப்பட்டு பொருளாதார நிலையங்களின் முகாமைத்துவ பொறுப்பிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்காக முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஏ) பொருளாதார நிலையங்களுக்கு தேவையான பதவிகளுக்கு சம்பளத்திட்டத்தை உள்ளடக்கி ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. 2016 பெப்ரவரி 12 ஆந் திகதிய MREA/5/7/General Trust/Vol-II ஆம் இலக்க கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் பொருளாதார நிலையங்களின் சகல ஊழியர்களும் அரசாங்க சேவையில் இல்லாதிருந்ததாகவும் அவர்கள் கடை காரியாலய ஊழியர் அதிகாரச்சட்டத்தினால் மேவுகை செய்யப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஐ) வெயன்கொடை பொருளதார நிலையத்தின் முகாமைத்துவப் பொறுப்பின் தலைவராக செயற்படுகின்ற கூட்டுறவு, உள்நாட்டு வணிக அமைச்சின் மேலதிக செயலாளர் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்துடன் இணைந்த CWE பொருளாதார நிலையங்களின் சேவை தனியார் கம்பனியின் பணிப்பாளர் ஒருவராகவும் செயற்பட்டிருந்தார். 2013 ஆம் ஆண்டின் போது பொருளாதார நிலையத்திற்கு மேற்கூறப்பட்ட கம்பனியின் பாதுகாப்பு சேவை பெறப்பட்டு அதற்காக ரூபா 2,039,290 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஒ) பொருளாதார நிலையங்களின் மிகைப் பணம் வங்கி நடைமுறைக் கணக்குகளில் அசைவின்றி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. மூன்று பொருளாதார நிலையங்களில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கி நடைமுறைக் கணக்குகளில் கூட்டுமொத்தமாக ரூபா 11,465,552 தொகை அவ்வாறு மாற்றமின்றி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஓ) 04 பொருளாதார நிலையங்கள் வெளித்தரப்பினர்களுக்குரிய காணிகளில் கூட்டுமொத்தமாக ரூபா 322 மில்லியன் செலவில் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. மேலும் ஒரு நிலையத்தில் வெளித்தரப்பினருக்குரிய காணியொன்றை கையேற்பதற்காக ரூபா 1.8 மில்லியன் செலவிடப்பட்ட போதும், கையேற்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஔ) மீகொட பொருளாதார நிலையத்தில் கம்பி வலை இட்டு சுற்றிவர மீன் விற்பனைக்காக அமைக்கப்பட்ட நிலையம் மற்றும் அதில் அமைந்துள்ள டைல் இட்டு அமைக்கப்பட்டிருந்த 12 மீன் தட்டுகளை உள்ளடக்கிய பகுதி நீண்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டில் ரூபா 541,576 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த சீசீரீவீ கெமரா முறைமை பாவனையின்றிக் காணப்பட்டது.

(க) மீகொட பொருளாதார நிலையத்தில் பாதுகாப்பிற்கு பொருத்தமானதாக 24 மணிநேரமும் செயற்படுகின்ற பொலிஸ் சேவையொன்றைப் பெற்றுக் கொள்வதற்கும் பாதுகாப்பு வேலைக்காக போதியளவான பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(கா) பொருளாதார நிலையங்களில் கடைகளுக்காக வாடகை அறவிடல் தொடர்பாக பின்வரும் அவதானிப்பக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டின் போது பல்வேறு காரணங்களின் அடிப்படையில் பொருளாதார நிலையத்தின் கடைகளுக்காக வாடகை உரிய பிரகாரம் அறவிடப்படாமையினால் ரூபா 97,142,303 நட்டமொன்று அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தது.

(ii) நுவரெலியா பொருளாதார நிலையத்தில் 136 கடைகளில் 129 கடைகளுக்கு உரிய வாடகையாளர்களுடன் முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(கி) பொருளாதார நிலையங்களின் ஒப்பந்த நிர்வாகம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014/2015 ஆம் ஆண்டுகளில் பொருளாதார நிலையங்களை நிர்மாணித்தல் மற்றும் அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் அரசாங்க பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றாது C.W.E. Construction & Engineering ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) தம்புள்ள பொருளாதார நிலையத்தின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் கையளிக்கும் போது பொதுமக்கள் போட்டிக்கு விடப்பட்டு குறைந்த கிரயத்துடன் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிதி இயலுமை மற்றும் உரிய துறையில் அனுபவம் என்பவற்றைக் கவனத்திற் கொள்ளாது சமூக அடிப்படையற்ற அமைப்பிற்கு நேரடியாக ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

(iii) வெயங்கொடை பொருளாதார நிலையத்தில் 06 கடைகளை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்திற்காக ஒப்பந்தகாரர்களைத் தெரிவு செய்வதற்காக முறையான திட்டமொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(கீ) பொருளாதார நிலையங்களில் நிர்மாணிக்கப்பட்ட வியாபாரத் தொகுதியை வியாபாரிகளுக்கு வழங்கும் போது பெறப்பட்ட மீளச் செலுத்தாத பிணை வைப்புக்கள் அந்த நிலையத்தின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தும் நோக்கில் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கிராமியப் பொருளாதார புனர்வாழ்வு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அந்த நிதியத்தில் 2008 யூன் மாதமளவில் காணப்பட்ட மீதி ரூபா 182.7 மில்லியனில் ரூபா 90 மில்லியன் உரிய அமைச்சின் பொருளாதார நிலையங்களை பராமரிக்கும் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பின்னரும் 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் பெறப்பட்ட மீளச் செலுத்தாத பிணை வைப்புக்கள் அக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. 2016 மே 01 ஆந் திகதி வரையில் அந்த நிதியத்தில் காணப்பட்ட ரூபா 29 மில்லியன் தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் புனர்வாழ்வு நிதியத்தின் கணக்குகள் இணக்கஞ் செய்யப்பட்டு

செயல்முன்னேற்றம் காலாண்டு ரீதியாக அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கும் அந்த சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியத்தை சட்டபூர்வமாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.14 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 32 | 25 | 07 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 693 | 676 | 17 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 52 | 74 | - | 22 |
| (v) | ஏனைய (ஒப்பந்த/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 04 | 04 | - | - |
| | மொத்தம் | 784 | 781 | 25 | 22 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தற்போது இந்த அமைச்சின் அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவின் நேரடி மேற்பார்வையில் பிரதேச செயலகங்களில் அமுல்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி உப செயற்திட்டங்களான கித்துள் அபிவிருத்தி செயற்திட்டம், கைப்பணிக் கைத்தொழில் கிராம செயற்திட்டம், பாரம்பரிய கைப்பணிக் கைத்தொழில் செயற்திட்டம் மற்றும் மட்பாண்ட கைத்தொழில் அபிவிருத்தி செயற்திட்டம் போன்ற செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக 221 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அந்த செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்ற பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை 9 இற்கு வரையறுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த 221 உத்தியோகத்தர்களில் 212 பேர்களின் சேவையை அமைச்சிற்குப் பெற்றுக் கொள்ளாது விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) கால்நடை வள அபிவிருத்திப் பிரிவின் கீழ் பிரதேச மட்டத்தில் அமுல்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக அந்தப் பிரிவிற்கு நியமிக்கப்பட்ட 319 உத்தியோகத்தர்கள் முறையான பிரகாரம் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.